# இலக்கியங்கள் காட்டும் சமயம்

***முனைவர் சி. கவிதா***
*உதவிப் பேராசிரியர்/ தமிழியல் துறை*
*கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*கோவை*

**முன்னுரை**

சமயம் என்றால் மனிதரைச் சமைப்பது அல்லது பக்குவப்படுத்துவது எனப் பொருள்படும். இயற்கையை வழிபட்ட மக்கள் சிறிது சிறிதாகச் சங்க இலக்கியம் தொடங்கி நடுகல் வழிபாட்டை முதன்மையாகக் கொண்டு உருவம் கொடுத்து சமய வழிபாட்டில் ஈடுபடலாயினர். சமயம் என்பது பக்குவப்படுத்தும் கொள்கைநெறி எனவும் பொருள் விளக்கம் பெறும்.சமயம் என்பது நியமிக்கப்பட்டது வரையறுக்கப்பட்டது என்றும் கூறுவர். இதற்கு மதம் என்ற பெயரும் உண்டென்பர் சான்றோர். மதி + அம் மதம் கடவுளை மதித்தல், கருதுதல் எனவும் பொருள் கூறுவர். சமயம் என்பது சாத்திரம் அன்று அது வாழும்முறையாகும். வாழ்க்கை நெறியாகும். இப்படித்தான் வாழவேண்டும் என்று மனிதனை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் கருவியாகச் சமயங்கள் இருந்திருக்கின்றன.

இறைவனோடு நம்மை நேரிடையாக இணைப்பதும் சமயம் என்கின்றார் விவேகானந்தர். மனிதனிடத்தில் மறைந்துள்ள தெய்வீகப் பண்புகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவது சமயம் என்போரும் உள். மேலும் சமயம் என்பது சொல், நெறி கொள்கை மதம் என்று பல பொருள்களைக் கொண்டுள்ளதை தமிழகராதி எடுத்துக்காட்டுகின்றது. ஆகவே சமயம் பற்றிய சான்றோர் கருத்துக்களையும் இலக்கியங்கள் சமயங்களை எவ்வாறு எடுத்துக்காட்டுகின்றன என்பதனையும் இக்கட்டுரை விளக்குவதாய் அமைகிறது.

**சமயம் பற்றி சான்றோர் கருத்துக்கள்**

இப்படித்தான் வாழ வேண்டும் என்ற உணர்வு ஒரு சமுதாயத்தில் எப்போது தோன்றுகிறதோ அக்காலகட்டத்தையே சமயநெறியின் தொடக்க நிலையாகக் கருதுவர். எனவே தொல்காப்பியர் காலத்திற்கு முன்னும் கூட மக்கள் மனதில் சமயஉணர்வு காணப்பெற்றிருந்தது எனக் கருதலாம். தொல்காப்பியர் இறைவனைக் குறிப்பிடும்போது கடவுள், தெய்வம் என்ற சொற்களைக் கையாண்டுள்ளார்.

பொதுவாக இன்றையச் சமயத்தின் பொருளையோ அடிப்படையையோ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களிடம் காணமுடியாது என்றும் அக்கால மக்களிடம் தோன்றிய எண்ணங்களே இன்று சமயம் என்று பேருரு கொள்ள அடிப்படையாயின என்று கா.சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்.

மனிதன் விலங்கினின்றும் தோன்றியவன். அவனை விலங்கினின்றும் பிரிப்பது சமயம். விலங்கு + சமயம் - மனிதன். எனவே சமயம் இன்றியமையாதது. மெய்யறிவு விளங்கப் பெற்றவர்கட்கும் அவ்வறிவுண்மையைக் கலையறிவினால் உணர்ந்து அதை கூறிக்கொண்டு நிற்பவர்க்கும் சமயம் ஒன்றே. மெய்யறிவு பெறாதார்க்குச் சமயம் பலவாகவே தோன்றும் என இராசகோபாலன் குறிப்பிடுகிறார்.

சமயம் என்பது நம்பிக்கைகள் சடங்குகள் இயற்கையிறந்த சக்திகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட நிறுவனம். இந்நிறுவனம் உன்னதமான சக்தியாகவும் இன்றியமையாத சக்தியாகவம் காணப்படுகிறது என ஈசுவரப்பிள்ளை தம் நூலில் கோடிட்டுக் காட்டுகிறார். சமயம், கொள்கை, மதம் என்ற பொருள்களைத் தன்னகத்தே கொண்டு மக்கள் வாழ்வுடன் தொடர்பு பெற்றவை என டாக்டர் எஸ்.கண்ணன் குறிப்பிடுகிறார்.

பேரரசுகளும் நாகரீகங்களும் உயர்சமயங்களும் உயர்சமயங்களின் அடிப்படையாகத் தோன்றுகின்றன என அர்னால்டுடாயின்பியன் குறிப்பிடுகிறார். மதம் என்பது ஆன்மாக்களை வீடுபேற்றிற்குப் பக்குவப்படுத்தவதனால் சமயம் என்றும் பெயரைப் பெற்றது என புலவர் செந்துறை

முத்து தெளிவுபடுத்துகிறார். மேலும் கடவுள் உண்டு என்றும் நம்பிக்கை வளர்ச்சியின் விளைவே சமயங்கள். இவ்வாறு பல சான்றோர்கள் சமயங்கள் என்பது மனிதனை பக்குவப்படுத்தவும் மெய்யறிவைக் காணவும் ஒழுக்கத்தை நிலைநாட்டவும் சிறந்த நிறுவனமாக இருப்பதனைத் தெளிவுபடுத்துகின்றனர்.

**சமயங்கள் உருவாகும் முன் இருந்த சமுதாயம்**

வேட்டையாடும் சமுகத்தில் சமயங்கள் இல்லை. இயற்கையுடன் போராடுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இயற்கையைக் கட்டப்படுத்தவும் ஓரளவு புரிந்துகொள்ளவும் முயற்சித்தனர். அதன் பின் இனக்குழுச் சமுகத்தில் மக்கள் குழுவாக வாழ்ந்தனர். அதன் குழுவிற்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுள் சக்திமிக்க தலைவனை வணங்கி அதன் வழிச் செயல்படத் தொடங்கினர்.

**சமயங்கள் தோற்றம்**

அதன் பின் ஏற்பட்ட நிலவுடைமைச் சமுகமே சமயம் உருவாக மிகப்பெரிய காரணி. போர்களும் பூசல்களும் மக்களின் ஒழுக்கவாழ்வைச் சீர்குலைத்தன. நாடு பிடிக்கும் ஆசையில் ஏற்பட்ட சிக்கல்களே சமயத்தைத் தோற்றுவித்தன. ஏற்றத்தாழ்வு, பிரிவினை போன்றனவும் வர்க்கப் போராட்டங்களும் உருவாகத் தேன்றின. “சமுக எதார்த்த நிலையின் தலைக்கீழ் பிம்பமே சமயம் என்கிறார் ஜார்ஜ் தாம்சன். இயற்கைக்கு முன்னால் ஆதிகலை மனிதன் மாய வித்தையை நம்பினான். அதுபோல நிலவுடைமைச் சமுகத்தில் மனிதன் மாய வித்தையை நம்பினான். அதுபோல நிலவுடைமைச் சமுகத்தால் மனிதனுக்கு இருக்கும் பலவீனத்தின் வெளிப்பாடு சமயங்கள் எனலாம்.

இயற்கைபுரியா மனிதன் மாயவித்தையை நம்பினான். சமுதாயத்தைப் புரிந்து கொள்ள முடியாத மனிதன் சமயத்தை நாடுகின்றான். இவ்வாறு மனிதனின் பலவீனமே சமயங்கள் உருவாகக் காரணமாயிற்று.

சங்க இலக்கிய காலத்தில் உருவ வழிபாடுகள் சிலை, கற்படிமங்கள், செப்புத் திருமேனிகள் போன்றவற்றைக் காண முடியவில்லை. ஆனால் விழாக்கள், குறிசொல்வது, வெறியாட்டு, மகிழ்ச்சிப் பாடல்கள், போர் நிகழ்வுகள் போன்றனவற்றை அறிகிறோம். ஒரு தெய்வத்தைக் குறிப்பிடாமல் அதன் அடையாளங்களாகவே சிலவற்றைச் சுட்டினர். சங்ககாலத்தில் சமயம் பொதுமைநோக்கோடு இருந்ததே அன்றி பிரிவினைப் பாகுபாடு இல்லை. சங்க இலக்கியம் மனிதர்களில் அதிக சக்தி பெற்ற மனிதர்களையே கடவுளாகப் பொதுமையுடன் வணங்கினர்.

அதே சமயம் 2 ஆம் நூற்றாண்டில் வட பகுதியில் இருந்து வந்த சமணம் மக்களிடம் ஏற்பட்ட மாற்றங்களைக் களைந்து நல்லதோர் சமுதாயம் உருவாவதையே நோக்கமாகக் கொண்டதால் சமணம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கடவுள் உருவ வணங்கும் முறைச் சடங்குகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. பிரிவினையின்மை. ஏற்றத்தாழ்வின்மை ஒழுக்கம் ஆகியவற்றைத் தங்களுடைய உயரிய கொள்கையாகக் கொண்டமை சமணத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டது.

மூன்றாம் நூற்றாண்டில் பௌத்த சமயம் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பௌத்தமும் மக்களுக்கு நல்வழிகாட்டுவதையே முதன்மையாகக் கொண்டது. இவ்வாறு சமணமும் பௌத்தமும் ஒழுக்கங்களை நிலைநாட்டி ஏற்றத்தாழ்வுகளையப் பாடுபட்டதால் மக்கள் அச்சமயங்களைப் பின்பற்றலாயினர். மேலும் இச்சமய கொள்கைகள் மிக கடுமையாக இருந்தமையும். (துறவையும் நிலையாமையையும்) பெண் ஏற்கப்படாமையும் இல்லற வெறுப்பும் சைவ வைணவ சமயங்கள் உருப்பெறக் காரணமாயின.

**தொல்காப்பியத்தில் சமயம்**

தொல்காப்பியத்தில் செய்யுளியலில் கருப்பொருளினைப் பற்றிக் கூறுகையில் தொல்காப்பியர்

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியோடு தொகை,**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப’ (தொல்.பொருள் 964)**

என்ற நூற்பாவில் முதல் கருப்பொருள் தெய்வத்தைக் குறிப்பிடுகிறார்.

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன்மேய மைவறை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்'(தொல்.பொருள் 951)**

என்ற நூற்பாவில் அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்கள் சுட்டப் பெறுகின்றன.

தெய்வங்கள் சுட்டபடபெறுவதால் சமயங்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்தமையை அறியலாம். வெறியாட்டு என்ற நிகழ்வு பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் சமய நம்பிக்கைகள் சடங்குகள் ஆகியன இருந்தமையும் தெளிவாகிறது.

**சைவ சமயம்**

இயற்கையை வழிபட்ட மக்கள் நாளடைவில் உருவம் கொடுத்து சமய வழிபாட்டில் ஈடுபடலாயினர். பெயர்களைச் சுட்டி இசைபாடத் தொடங்கினர். நம்பிக்கைளையும் சடங்குகளையும் பின்பற்றி பிற சமயக் கொள்கைகளை எதிர்க்கவும் முற்பட்டனர்.

**சைவம் - பொருள்**

நெருப்பின் சிவப்பு - சிவனிய - சிவன் என்ற சொல்லிருந்தே சைவம் என்ற சொல் வந்ததால் அறிஞர்கள் குறிப்பிடுவது இயற்கையின் நிறத்தினைக் கொண்டு உருவாக்கப்பட்டதே சைவம் எனலாம்.

ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் சிவவழிபாடு நிலைப்பெற்றிருந்தது என தொல்காப்பிய ஆராச்சியாளர்கள் நிறுவியுள்ளனர். ஆரியர்கள் தம் பழையமறையில் சிவபெருமானைச் இழிவாகக் குறிப்பிட்டுள்ளதால் சிவன் திராவிடத் தெய்வமே என அறியலாம் என வேங்கடசாமி தம் நூலில் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தில் மாயோன், சேயோன், வருணன், வேந்தன், கொற்றவை என நில தெய்வங்களை மட்டுமே எடுத்துக்காட்டுகிறார் தொல்காப்பியர். சிவ என்ற சொல் காணப்படாமல் சிவனின் அடையாளங்கள் எடுத்துக்காட்டகின்றார்.

**முக்கட்செல்வன் நகர்வலகம் செயற்கே (அகநானூறு பா.18)**
**பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீலமணிமிடற் றொருவன் போல**
**மன்னுக பெரும நீயே'(கலித்தொகை பா.142)**

சங்க இலக்கியங்களில் சிவனைக் குறிப்பிட்டமையையும் சைவம் என்ற தனி சமயமாக இல்லாமல் தெய்வம் என்ற பெயரில் இருந்தமையையும் அறியலாம். அன்பே உயிர்நாடியாகக் கொண்ட நெறியே சிவநெறி. புலால்நீக்கிய உணவை உட்கொள்ளும் வாழ்க்கையைக் குறிக்கும் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களே சைவர்கள் எனப்பட்டனர்.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலேயே தோன்றி இன்றும் உலகத்தில் நிலைத்து நிற்கும் சமயங்கள் முன்று. அவை இந்து சமயம், சௌராஸ்திய சமயம், யுத சமயம் என குறிப்பிடுகிறார் விவேகானந்தர். மேலும் சைவம், வைணவம், சாக்தம், காணபத்திரம், கௌமாரம், சௌரம் ஆறு சமயங்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். சிவநெறியைத் திருமுறை ஆசிரியர்கள் திருநெறி, நன்நெறி, அருள்நெறி, தவநெறி என்றே மிகுதியும் கூறுகின்றனர். சங்க இலக்கியத்தில் இருந்த சிவன், திருமால், கொற்றவை, முருகன் போன்ற தெய்வவழிபாடுகள் முன்றாம் நூற்றாண்டில் களப்பிரர்கள் வருகையால் நலிவடைந்தது மீண்டும் பல்லவர் காலத்தில் சைவம் என்னும் தனிச் சமயமாக பெரும் பெயரோடு புத்துயிர் பெற்று நாற் சைவ பெரியோராலும் நாயன்மார்களாலும் வளர்ச்சியின் உச்சநிலையினை அடைந்தது எனலாம்.

**சங்க இலக்கியத்தில் (சமயம்)**

சங்க இலக்கியங்களில் பொதுவாக கடவுள் வாழ்த்துப் பாடல் காணப்படுவது சமயங்கள் இருத்தலை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் சமயம் என்ற சொல் ஆசாரக்கோவை, பழமொழி ஆகிய இரு நூல்களில் மட்டுமே கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியங்களில் மதம் என்ற சொல் அடிப்படைப் பொருளாக கொள்கை, செருக்கு, வன்மை, அறிவு, கருத்து, நோக்கம், பெருமை, வலிமை, விருப்பம் என பல பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குழுவர்க்குரிய சமயம் என்ற சொல் மதத்திற்குரிய பொருளாகவும் உருவாகியது எனலாம். மேலும் சங்க இலக்கியத்தில் பல சமயம் என்று குறிப்பிட இயலாமல் பல தெய்வம் அல்லது கடவுள் என்ற நிலையைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சங்க இலக்கியத்தில் சிவன்**

நற்றிணையில் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடல்

**மாநிலஞ் சேவடியாகத் தூநீர்**
**வளைநரல் பௌவம் உடுக்கையாக**
**பசுங்கதிர் மதியமொடு சுடர் கண் ஆக**
**இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய**
**வேத முதல்வன் என்ப**
**தீது அற விளங்கிய திகிரியோனே (நற்றிணை பா.1)**

உடுக்கைக்கொண்டு நெற்றிகண் உடைய பசுங்கதிர் மதியணிந்த கடவுள் என்று குறிப்பிடவது சிவனே எனலாம் சிவனுக்குரிய அடையாளங்களே எடுத்துரைக்கப்படுகிறது.

ஐங்குறுநூற்றுக்கும் பெருந்தேவனாரால் பாடப்பட்ட கடவுள் வாழ்த்து முன்றடியில் அழகுடன் அமைந்துள்ளது.

**நீல மேனிவாலிழை பாகத்து**
**ஒருவன் இருதாள் நிழற்கீழ்**
**முவகையுலகு முகிழ்த்தன முறையே (ஐங்குறுநூறு பா.1)**

என்று உமாதேவியாரை ஒருபாகமாகவுடையவன் மூவகை உலகத் தோற்றத்திற்குக் காரணியாம் என்று குறிப்பிடுகிறார்.

ஒப்பற்ற புறப்பாடலாக விளங்கும் புறநானூறு கடவுள் வாழ்த்துப் பாடல்
கண்ணினார் நறுங்கொன்றை காமர்

**வண்ண மார்பின் தாருமு கொன்றை**
**ஊர்தி வால் வெள்ளேறே சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப**
**கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை**
**மறைநவில் அந்தணர் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்**
**பிறை நுதல் வண்ணம் ஆகின்று அப்பிறை**
**பதினெண் கணனும் ஏத்தவம் படுமே**
**எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய**
**நீர் அறவு அறியாக் கரகத்துத்**
**தாழ்கடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே’**

எல்லா உயிர்கட்கும் காவலாக விளங்குகின்ற இறைவன் என சிவன் அடையாளங்களைக் குறிப்பிடுகின்றார்.

**கலித்தொகையில் சிவன்**

**மணிமிடற்று மாண்மலர்க் கொன்றையவன்**
**எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறை (கலித்தொகை பா.105)**

கொன்றமலர் அணிந்த எரிதழல் ஏந்திய பிறை சூடியவன் என்று சிவனடையாளங்களை எடுத்துரைக்கிறது.

**விரிசடைப் பொறையுழித்து (பரிபாடல் பா.9)**
**புறம்புதை தாழ்ந்த சடையன் (பதிற்றுப்பத்து பா.1)**

எனப் பரிபாடலும் பதிற்றுப்பத்தும் சிவன் அடையாளங்களை எடுத்துரைக்கின்றன.

சங்க இலக்கியத்தில் சிவபெருமான் ஆலமர்கடவுள், ஆலமர்செல்வன், முக்கட்செல்வன், முக்கணான், கொன்றைமாலை அணிந்தவன், நீலமணி போன்ற நிறம்உடையவன் விரிசடையையுடையவன், பிறை திங்களை அணிந்தவன் முதலியன குறிப்பிடப் பெறுகின்றன.

சிவபெருமான் அடியவர்களுக்கு அருளும் அருட்செயல்களும் தீயனவற்றை அழிக்கும் ஆற்றல்களும் காட்டப் பெறுகின்றன. இவ்வாறு சிவபெருமானைக் குறித்து வரும் செய்திகள் புராண் காலத்திற்கு முற்பட்ட வேதகாலத்தில் வெளிப்பட்ட செய்திகளாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

**நீரும் நிலனும் தீயும் வளியுமாக விசம் போடைந்தும்**
**னியற்றிய மழுவாணெடியோன் தலைவனாக...**

என சிவபெருமான் யாவற்றையும் படைத்தவனாக ஏனைய தேவர்க்குத் தலைவனாக, முதல்வனாக விளங்குகிறார் என மதுரைக்காஞ்சியில் சிவன் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அகப்பொருளை விளக்குவதில் சிறந்து நிற்கின்ற அகநானூற்றில் திணைக்கூறுகள் பாடப்படடுள்ளன. இந்நூலுக்கு பெருந்தேவனார் பாடியதாகக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் அமைகிறது.

**கார்விரி கொன்றைய பொன்னேர்புதுமலர்த்**
**தாரன் மாலையின் மலைந்த கண்ணிய...........**
**தாவறாணிழற் தவர்ந்தன்றால் உலகே' (அகநானூறு பா.1)**

என பதினாறடியளவு நெடிய செய்யுளாக அமைந்து மணிமிடற்றண்ணல் (சிவன்) தாள் நிழற்கீழ் உலகு உள்ளது என்பது விளங்கப் பெறுகிறது.

**புணியியரத்தை நின்குடையே முனிவா;**
**முக்கட் செல்வர் நகர் வலஞ்செற்கே'(புறம் பா. 6)**

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக்கிழார் பாடிய பாடல் கடைச்சங்க காலத்திற் பாண்டியநாடடில் சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைந்திருந்த செய்தியை எடுத்துரைக்கின்றது. இவ்வாறு சங்க இலக்கியத்தில் சிவன் எனக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டாது சிவனின் அடையாளங்கள் மட்டும் எடுத்துக்காட்டப் பெறுகிறது. மேலும் சைவம் எனும் தனிச்சமயம் இருந்தமையாகவும் எடுத்துக்காட்டப்படவில்லை.

**வைணவ சமயம்**

சைவத்தைப் போலவே வைணவ இலக்கியம் மிகவும் தொன்மையானதாகும். மாயோன் என்றும் மாலவன் என்றும் அழைக்கப்பெறும் வைணவக் கடவுள் பிற்காலத்தில் விஸ்ணு என அழைக்கப்பெற்றார். விண் - விண்ணு மண்-மண்ணு என்றாகியது போல பிற்காலத்தில் சமஸ்கிரதக் கலப்பினால் விஸ்ணு என்றாயிற்று என தேவநேயப்பாவாணர் பெருஞ்சித்திரனார் ஆகியோர் கருதுகின்றனர்.

மால்-மயக்கத்தைத் தருபவன், வளத்தைத் தருபவன், கல்வியைத் தருபவன், களிப்பைத் தருபவன் (அழிப்பதற்காகக் காப்பவன்) இவன் மயக்கத்தைத் தீர்ப்பவன், சித்தத்தில் தெளிவைத் தருபவன், அந்தமாகத் திகழ்பவன், மோனதைத் தருபவன், எனவே நிலைத்தல், திளைத்தல், அழித்தல், கூடுதல், போன்றவற்றின் நிலைக்களனாகத் திகழ்ந்தது வைணவம். நிலையாமை, தனிமை, தவம், மோனம் போன்றவற்றின் நிலைகளனாகத் திகழ்வது வைணவம். அனைத்துமே வைணவம் என்னும் பெயருக்கு உரியது. விஸ்ணு என்பதற்கு எங்கும் நிறைந்தவன் என்று குறிப்பிடுவதே சிறந்த பொருளாகும்.

**நாராயணன் முவேழ் உலகுக்கும் நாதன் என்றும் அவனே**
**நிறைந்த எல்லாப் பொருளுக்கும் வித்து என்றும்**
**திருமகளும் நீயே நிலா நிற்பக் கண்டகதிர் நான்கு**

அடைந்தேன் உன் திருவடியே' என இராமனுஜர் தம் ஆழ்வார்கள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். துஸ்டர்களை அழிப்பதற்கும். நல்லோரைக் காப்பதற்கும் நான் யுகந்தோறும் அவதாரம் செய்கிறேன் என்று கீதாச்சாரீயான கண்ணபிரான் கீதையில் மொழிந்துள்ளார்.

வைணவம் பற்றி கூறுகையில் கி.மு.முன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே தெரிகிறது. கோசண்டி நானாகட் என்னும் இடங்களில் கிடைத்த கல்வெட்டில் பலதேவன் வாசுதேவன் ஆகியோரை இணைத்து வணங்கியமை காணக்கிடக்கின்றன. எனவே வட இந்தியாவில் கி.மு.முன்றாம் நூற்றாண்டில் இருந்தமை நன்கு தெளிவுப்படுகிறது.

தொல்காப்பியா் குறிப்பிடும் மாயோன் எனப்படுபவா் வைணவக் கடவுளான திருமாலே ஆவா;. புறத்திணையில் பூவை நிலையிலும் மாயோன் புகழ் பேசப்படுகிறது.

**மாயோன் மேய மன்பெருஞ்சிறப்பின்**
**தாவா விழுப்புகழ் பூவை நிலையும் (தொல்.பொருள் 1009)**

தொல்காப்பியா் கி.மு.300இல் வாழ்கிறாா் என்கிறாா் இராசமாணிக்கனாா். புத்தமதம் நுழையும் முன்பே இந்நூல் செய்யபட்டதாகக் குறிப்பிடலாம். எனவே தொல்காப்பியா் குறிப்பிடும் மாயோன் கி.மு.300 ஆண்டுகளுக்கு முற்பட்டவா் எனலாம்.

பல்லவமன்னன் சிம்மவிஸ்ணு காலத்தில் வைணவ சமயத்தைச் சாா்ந்திருந்ததாகக் குறிப்படுகிறது. எனவே பல்லவா் காலம் தொட்டு சைவத்தைப் போலவே வைணவமும் சிறப்பிடம் பெறத் தொடங்கியது. ஆனால் சைவமும் வைணவமும் தனிப்பெரும் சமயமாகப் பிரிந்திருக்கவில்லை. காரணம் இவ்விரு சமயங்களும் சேர்ந்து சமண, பௌத்த சமயங்களை ஒழிப்பதிலே காட்டிய ஒற்றுமையே எனலாம்.

**சங்க இலக்கியத்தில் திருமால்**

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மாயோன், திருமால் என்பவர் சங்க இலக்கியத்தில் முல்லை நிலத் தெய்வமாகப் போற்றப்படுகின்றார். திருமால் அவதாரக் கதைகள் சங்க காலத்தில் வழக்கில் இருந்தன ஊழிக்கண் கடலில் ஆழ்ந்த உலகைத் திருமால் பன்றியுருக் கொண்டு தம்மருப்பால் தூக்கி மேலெடுத்தார். அப்போது இடைவிடாது பெய்த மழைநீரை அன்ன சேவலாக்கி இறகால் புலா்த்தினாா். மேலும் பிரகலாதன் திருமாலைப் புகழ அவன் தந்தை அவனைப் பலவாறு துன்புறுத்திய போது அவா் தூணினின்றும் தோன்றி தம்மை இகழ்ந்த அத்தந்தையை உகிரால் பிளந்தாா் திருமால் ஞாலத்தை மூன்றடியால் அளந்தாா்.
இச்செய்தியை

**மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்**
**தாஅய தெல்லாம் ஒருங்கு'** என்று கலித்தொகைப்பாடல் எடுத்தியம்புகின்றது.

**திருமால் அடையாளங்கள்**

திருமால், மால், மாயோன், நெடியோன், என்ற பெயா்களில் வழங்கப்படுகிறாா். அயன்கரியன், நீலநிறத்தான், கையில் சக்கரம், மாா்பில் திருமகள், மறுதித் துழாய் மாலை, உடம்பில் பீதாம்பர உடை, செல்லூா்தி கருடன், கொடி உடையவன், பாற்கடலில் அரவணையில் அறிதுயில் கொள்பவன், ஆலிலைக் கிடந்தவன் என்றெல்லாம் அவன் பெருமைக்குரிய அடையாளங்கள் திருமாலுக்கு வழங்கப்படுகின்றது.

**சங்க இலக்கியத்தில் பிற தெய்வங்கள்**

**முருகன்**

குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில் முருகப்பெருமான் திருவுருவம் அருள் உள்ளமும் தெரிகிறது. சிவந்த திருவடி பவழம் போன்ற மேனி நீண்ட வேலும் சேவற் கொடியும் நெஞ்சொத்த அசுரனை இரண்டாய்ப் பிளந்த வலிமையுடைய வேலாயுதம் பெற்றவனாகவும் உலக உயிா;களைக் காப்பவனாகவும் முருகன் பேசப்படுகின்றான்.

நக்கீரனரால் பாடப்பட்ட திருமுருகாற்றுப்படை நூல் முழுமையும் இறைவனைப் பற்றியதாகவே உள்ளது. இந்நூலில் முருகப் பெருமானின் இறைத்தன்மை ஆறுமுகம் பன்னிருகைகள் ஐந்தொழில் சிறப்புகள், வேன்மகள் ஆடும் விழா வெறியாட்டு ஆகியன தனித்தனியே சிறப்புடன் பேசப்படுகிறது. வீடுபேற்றினை மகிழ்ந்து அளிக்கும் முருகப்பெருமான் என்று குறிப்பிடப்படுகிறார்.

**கொற்றவை**

கொற்றவை அக்கால மக்களின் வெற்றித் தெய்வமாக வணங்கப்பட்டவள். கொற்றம் - வெற்றி அவ்வை-அம்மை. வெற்றியாகிய தாயை வணங்குவதைக் கொற்றவை நிலை என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மறங்கடைக் குட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே புறத்திணைத் துறை பற்றி கூறும் போது கொற்றவையைக் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியத்தில் கொற்றவை பற்றிய செய்திகள் அரிதாகவே காணப்படுகின்றன.

**பெருங்காட்டக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு**

என கலித்தொகையிலும்

**நெற்றி விழியா நிறைந்திலகம் இட்டாளே**
**கொற்றவை கோலங் கொண்டு ஓர் பெண் என பரிபாடலும்**
**உருகெழு மரபின் ஆயரை**

என பதிற்றுப்பத்தும் குறிப்பிடுவன கொற்றவையைக் குறிக்கும்.

நெடுநல் வாடையில் போருக்குச் சென்று வெற்றி பெற்றுத் திரும்பும் பொருட்டு வேண்டிய தெய்வம் கொற்றவை என நச்சினார்க்கினியர் உரை விளக்கமளிக்கின்றார். இத்தெய்வம் பற்றி சிலம்பிலும் மேகலையிலும் பல செய்திகள் இடம் பெறுகின்றன. மேலும் சங்க இலக்கியத்தில் இந்திரன், வருணன், திருமகள் போன்ற கடவுள்களையும் காணலாம்.

**சமண சமயம்**

சமணர்கள் கி.மு.3 ஆம் நூற்றாண்டினர் என பிராமி கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. மேலும் களப்பிரர்களால் சமணம் வளர்ச்சி நிலையை அடைந்தது எனலாம். சமணம் - ஆருகதம், நிகண்டம், அநேகான் வாதம் என்றும் பல பெயர்கள் இதற்கு உண்டு. சமணர்கள் பிண்டியர், தீர்த்தங்கரர், எனவும் அழைக்கப்பட்டனர். சந்திரகுப்த மௌரியரின் குருநாதர் பத்திரபாகு முனிவர் 12000 மாணாக்கர்களுடன் மைசூரில் சிரவண பெலகொளாவுக்கு வந்து தங்கினர் என்றும் அவருடைய மாணாக்கர்கள் சமயப் பணியில் ஈடுபட்டனர் என்றும் கூறுவர். சமணத்தின் வளர்ச்சிக்கு அதன் சங்கமே காரணம் எனலாம்.

**சமணக் கொள்கைகள்**

ஞானமே உயர்வுக்கு அடிப்படை என்றனர். உயர்வு தாழ்வு கருதாது உயிர்க்கொலையைத் தவிர பிற தொழில்களை மதித்தனர் பட்டிதொட்டி எங்கும் துறவிகள் சென்று பணியாற்றினர். கருணை உள்ளத்தோடு மக்களுக்கு அன்பும் அறிவும் உணவும் மருந்தும் கொடுத்துதவினர். நிலையாமையை எடுத்துணர்த்தினர். இதுவே சமணம் வேரூன்ற காரணமாயிற்று. மேலும் தமிழ் கற்று தமிழ்மொழியிலேயே இலக்கண இலக்கிய நூல்களைப் படைத்து மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தனர்.

சமணத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் இல்லறத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் துறவே வீடுபேறு என்றமையேயாகும். மேலும் நிலையாமையை எடுத்துரைத்ததும் பெண் பிறவி பாவம் என்றதும் பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்றதும் சமய வீழ்ச்சிக்குக் காரணிகளாக இருக்கலாம். மேலும் பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இக்குறையைப் பயன்படுத்தி இல்லறம் போற்றி இறைவனை அடைதலை வற்புறுத்தியதால் சமணம் வீழ்ச்சி நிலைமை அடைந்தது.

**சங்க இலக்கியத்தில் சமணம்**

நாலடியாரில் பதுமனார் சமணமதப் பாடலாக உட்கொள்ளப்படும் செய்திகளில் அனைவா;க்கும் உயிராகவும் உரியதாகவும் கடவுள் வாழ்த்தியல் பாடல்

**வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்**
**காலநிலந் தோயாக் கடவுளை யாநிலம்**
**சென்றியுற வணங்கிச் சேர்தும் - எம்உள்ளத்து**
**முன்னியவை முடிக வென்று**

 ISSN: 2454-3993

அருகனின் ஆவியினால் இயங்குவது அதனாலேயே இயக்கம் நடைபெறுகிறது என்று கூறியதாகக் கொள்வர்.

நீதிநூல்களில் தலைசிறந்தது திருக்குறள். அத்தகைய திருக்குறளில் சமயம் இன்னதெனக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் சமணர் போற்றிய கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை புறங்கூறாமை, எழுத்தறிவித்தல், உதவுதல் போன்றவற்றை எடுத்துரைக்கின்றது. எனவே சமணக் கொள்கைகள் பலவற்றை உள்ளடக்கியது எனலாம். மேலும் சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய நூல்களில் அருகனின் திருவடி மூவாசை துறத்தல், மண்ஒழிந்து விண்ணோர் ஏத்துதல் போன்ற சமணக் கருத்துக்கள் இடம் பெறுகின்றன.

**தொகுப்புரை**

சமயம் என்பதன் விளக்கத்தையும் சமயங்கள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பதனையும் சமயம் பற்றிய சான்றோர் கருத்துக்களையும் சங்க இலக்கியத்தில் பல்சமய அடையாளங்கள் எடுத்துக்காட்டப்படுவதையும் விளக்குவதாய் அமைகிறது.

**பார்வை நூல்கள்**

1. அருணாச்சலம். ப. பக்தி இலக்கியம்
2. இளங்கோவன், சங்ககாலக் கடவுளர்.
3. உலகநாதன்.வி., கோதையின் காதல் ஓவியம்.
4. சரளா இராசகோபாலன், சமயம் வளர்த்த மகளிர்.
5. மயிலை சீனிவேங்கடசாமி, சமயங்கள் வளர்த்த தமிழ்.
6. ஜார்ஜ் தாம்சன் (தமிழில் நேத்ரா), சமயம் பற்றி.